# 2015 ஜுலையிலிருந்து 2015 நவம்பர் வரைக்குமான அரசியலமைப்பு சபையின் முதலாவது அறிக்கை

**சபையின் நிறுவுகை**

அரசியலமைப்பு சபையானது அரசியலமைப்பின் 19வது திருத்தத்தின் பிரகாரம் நிறுவப்பட்டது. அரசியலமைப்புக்கான 19வது திருத்தமானது கௌரவ சபாநாயகர் அவர்களால் 2015 மே 15 ஆம் திகதி சான்றுப்படுத்தப்பட்டதுடன், அன்றைய தினமே வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

**சபையின் ஆக்கம்**

அரசியலமைப்பின் உறுப்புரை 41அ(1) இல் குறித்துரைக்கப்பட்டவாறாக அரசியலமைப்பு சபையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்

(அ) பிரதம அமைச்சர்

(ஆ) சபாநாயகர்

(இ) பாராளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைவர்

(ஈ) ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்

(உ) பிரதம அமைச்சராலும் ஜனாதிபதியினாலும் பெயர் குறிப்பிடப்பட்டு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஐவர், அவர்களில் இருவர் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பர்.

(ஊ) பிரதம அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சார்ந்த அரசியல் கட்சிகள் அல்லது சுயாதீனக் குழுக்கள் அல்லாத அரசியல் கட்சிகள் அல்லது சுயாதீனக் குழுக்களைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையோரின் இணக்கத்துடன் பெயர் குறிக்கப்பட்டு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்.

**சபையின் தவிசாளர்**

உறுப்புரை 41அ(2) இன் பிரகாரம் சபாநாயகர் சபையின் தவிசாளராக இருப்பார்.

**சபைக்கான நியமனங்கள்**

41அ(1)(ஈ)இன் பிரகாரம் சபையின் உறுப்பினர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார். உறுப்புரை 41அ(1)(ஈ) இன்கீழ் மேன்மைதங்கிய ஜனாதிபதி 2015 செபதெம்பர் 07 ஆம் திகதி திகதியிடப்பட்ட அவரது கடிதத்தின் ஊடாக கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சருமான கௌரவ பாட்டளி சம்பிக்க ரணவக்கவை அரசியலமைப்பு சபைக்கு நியமிப்பதாக கௌரவ சபாநாயகருக்கு அறிவித்தார்.

உறுப்புரை 41(அ)(4) பின்வருமாறு குறிப்பிடுகின்றது: பந்தி (1)இன் உப பந்தி (உ) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து நபர்களை நியமிப்பதில் தொழில்வாண்மை மற்றும் சமூகப் பல்வகைமை உள்ளடங்கலாக இலங்கைச் சமூகத்தின் பன்மைவாதப் பண்பினை அரசியலமைப்புச்சபை பிரதிபலிக்கின்றது என்பதை உறுதிப்படுத்த பிரதியமைச்சரும், எதிர்க்கட்சித்தலைவரும் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யப்படும் அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் சுயாதீனக் குழுக்களையும் கலந்தாலோசிப்பர். பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களும் எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ ஆர்.சம்பந்தன் அவர்களும் ஒப்பமிட்டு கௌரவ சபாநாயகருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் பின்வரும் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் உறுப்புரை 41(அ)(1)(உ) இன்கீழ் அரசியலமைப்புச்சபையின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை அவருக்கு அறிவித்துள்ளதுடன் கௌரவ சபாநாயகர் இதே விடயத்தினை மேதகு ஜனாதிபதிக்கு 2015 செப்டெம்பர் 21இல் அறிவித்துள்ளார்.

கௌரவ கலாநிதி விஜேதாச ராஜபக்ச, நீதி, புத்தசாசன அமைச்சர்.

கௌரவ விஜித ஹேரத்.

பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களும், எதிர்க்கட்சித்தலைவர் கௌரவ ஆர்.சம்பந்தன் அவர்களும் ஒப்பமிட்டு கௌரவ சபாநாயகருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் பின்வரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத மூன்று நபர்கள் அரசியலமைப்பின் உறுப்புரை 41(அ)(1)(உ) இன் அரசியலமைப்புச் சபையின் உறுப்பினர்களாக

நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் இந்த மூன்று நபர்களையும் அரசியலமைப்புச் சபைக்கு நியமிப்பதற்கு அரசியலமைப்பின் உறுப்புரை 41(அ)(5)இற்கு அமைவாகப் பாராளுமன்ற அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என்பதையும் அவருக்கு அறிவித்துள்ளனர். கௌரவ சபாநாயகர் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தினை மேதகு ஜனாதிபதிக்கு 2015 செப்டெம்பர் 22இல் அறிவித்தார். இதற்கமைய பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத பின்வரும் மூன்று நபர்களை மேதகு ஜனாதிபதி அரசியலமைப்புச் சபைக்கு நியமித்தார்.

கலாநிதி.ஏ.டி.ஆரியரத்ன

திரு.சிப்லி அசிஸ், ஜனாதிபதி சட்டத்தரணி

கலாநிதி (செல்வி/திருமதி) ராதிகா குமாரசுவாமி

உறுப்புரை 41அ (1)(ஊ)இன் பிரகாரம், பிரதம அமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவரும் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் அல்லது சுயாதீனக் குழுக்களைச் சாராத அரசியல் கட்சிகளை அல்லது சுயாதீனக் குழுக்களைச் சேர்ந்த ஓர் உறுப்பினர் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானோரின் இணக்கத்துடன் அமர்விக்கப்படுகையில் அவர் ஜனாதிபதியினால் அரசியலமைப்புச் சபைக்கு நியமிக்கப்படுவார்.

இதற்கமைய, கௌரவ டபிள்யு.டி.ஜெ.செனெவிரத்ன, தொழில் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் மேற்குறிப்பிடப்பட்டுள்ள சபையின் பதவிக்கு பிரதம அமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவரும் சாராத பாராளுமன்றத்திலுள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்களினால் ஒப்பமிடப்பட்டுள்ள கடிதத்தினால் நியமிக்கப்ட்டுள்ளார். மேலும் நியமனமானது கௌரவ சபாநாயகரினால் மேதகு ஜனாதிபதிக்கு 2015 செப்டெம்பர் 22இல் அறிவிக்கப்பட்டது. இதற்கமைய கௌரவ ஜோன் செனெவிரத்ன, மேதகு ஜனாதிபதியினால் அரசியலமைப்புச் சபைக்கு நியமிக்கப்பட்டார்.

**சபை உறுப்பினர்கள்**

கௌரவ கரு ஜயசூரிய (சபாநாயகர்) - தவிசாளர்

கௌரவ ரணில் விக்ரமசிங்க (பிரதம அமைச்சர்)ஸ

கௌரவ ஆர். சம்பந்தன் (எதிர்க்கட்சித் தலைவர்)

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ (கலாநிதி) விஜேதாச ராஜபக்ச

கௌரவ விஜித ஹேரத்

கௌரவ டபிள்யு.டி.ஜெ.செனெவிரத்ன

கலாநிதி.ஏ.டி. ஆரியரத்ன

திரு.சிப்லி அசிஸ், ஜனாதிபதி சட்டத்தரணி

கலாநிதி (திருமதி) ராதிகா குமாரசுவாமி

**சபையின் கூட்டங்கள்**

உறுப்புரை 41உ(1)இன் பிரகாரம் சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்காகச் சபையானது குறைந்தது ஒவ்வொரு மாதமும் இரண்டு தடவையாவது கூடவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பின்வரும் தினங்களில் சபை கூடியது: 2015, ஜுலை 03, 2015 ஜுலை 09, 2015 செப்டெம்பர் 10, 2015 செப்டெம்பர் 21, 2015 செப்டெம்பர் 23, 2015 ஒக்டோபர் 09, 2015 ஒக்டோபர் 14, 2015 ஒக்டோபர் 22, 2015 நவம்பர் 04, 2015 நவம்பர் 06, 2015 நவம்பர் 09, 2015 நவம்பர் 19, 2015 நவம்பர் 23, 2015 நவம்பர் 24.

**சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்**

1. ஆணைக்குழுக்களுக்கு நியமனங்கள் மேற்கொள்ளப்படுகையில் சட்டத்தரணிகளுக்கு மேலதிகமாக ஆணைக்குழுக்களைப் பிரதிநிதித்துவம் செய்ய பொறியியலாளர்கள் மற்றும் கட்டிடக் கலைஞர்கள் போன்ற பரந்த வீச்சிலான துறைகளைச்சேர்ந்த தொழில்வல்லுனர்களுக்கு வாய்ப்பு வழங்குவதென்று 2015 ஜுலை 09 இல் கூடிய சபை தீர்மானித்தது.

2. அரசசேவை ஆணைக்குழு, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துறைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஆகியவற்றினை இயலுமான அளவு விரைவாக அமைக்கவேண்டிய தேவையினை 2015 செப்டெம்பர் 10 இல் கூடிய சபை வலியுறுத்தியது. இதற்கமைய 2015, செப்டெம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னர் இந்த ஆணைக்குழுக்களுக்காக நியமனங்களை மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்டட அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் தொழில் வல்லுனர்களுக்கும் சிவில் நிறுவனங்களுக்கும் வாய்ப்பு வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

3. ஆணைக்குழுவிற்கான பெயர் நியமனங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்பை அரசியலமைப்பு சபை உறுப்பினர்களுக்கும் வழங்குவதற்கு 2015 செப்டம்பர் 21 இல் கூடிய சபை தீர்மானித்தது. அதேவேளை ஆணைக்குழுவிற்கான பெயர் நியமனங்களை மேற்கொள்வதற்கான காலப்பகுதியை 2015 செப்டம்பர் 30 வரை நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

4. திரு.தம்மிக தசநாயக்க அவர்களை அரசியலமைப்புச் சபையின் பதில் செயலாளர் நாயகமாக நியமிப்பதற்கும் சபை தீர்மானித்தது.

**பெயர் நியமனங்களைக் கோருவதற்கான முறை**

பெயர் நியமனத்திற்கான உரிய படிவத்தை பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன, அத்தோடு 2015 செப்டம்பர் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டிருந்தது. அதன்பிரகாரம் தனிநபர்கள் மற்றும் அமைப்புகள் ஆகியவற்றிடமிருந்து கிடைக்கப்பெற்ற பெயர் நியமனங்களின் மொத்த எண்ணிக்கை 482 ஆகும்.

(அ) அரசியலமைப்பு சபை உறுப்பினர்கள் - 191

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி தலைவர்கள் - 09

(இ) தொழில்வாண்மை சங்க அமைப்புகள் - 160

(ஈ) பல்கலைக்கழக ஆசிரியர்கள் சம்மேளனம் - 09

(உ) இலங்கை பல்கலைக்கழக பெண்கள் சம்மேளனம் - 05

(ஊ) ஏனைய அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் - 108

5. தவிசாளர் தெரிவு மற்றும் ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்படவுள்ள உறுப்பினர்கள் தொடர்பான ஆரம்பக்கட்ட மதிப்பீட்டை மேற்கொள்ளும் செயற்பணி ஆகியவற்றை சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் அமைப்புசபை உறுப்பினர்ளை கொண்ட உபகுழுவிற்கு வழங்குவதற்கு 2015 செப்டம்பர் 23 இல் கூடிய அரசியலமைப்புச் சபை உறுப்பினர்கள் தீர்மானித்தனர்.

**ஆணைக்குழுக்களின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோரின் தெரிவின்போது பின்பற்றிய நடைமுறைகள்.**

தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோரைத் தெரிவுசெய்கின்றபொழுது திறன்சார்ந்த மற்றும் பண்புசார்ந்த மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அரசியலமைப்பு மற்றும் / அல்லது சம்பந்தப்பட்ட சட்டம் ஆகியவற்றின்கீழ் ஆணையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் தொடர்பிலான பண்புசார்ந்த பகுப்பாய்வும் உபகுழுவினால் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் முழு அளவில் சபையால் அது மேற்கொள்ளப்பட்டது.

**பண்புசார்ந்த பகுப்பாய்வின்பொழுது பயன்படுத்தப்பட்ட நெறிமுறைகள்**

1. அரசியலமைப்பு சபையினால் இணங்கப்பட்ட நடைமுறைகளின் பிரகாரம் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களுக்கு மாத்திரம் தெரிவு மட்டுப்படுத்தப்பட்டது. அதிகாரமளிக்கப்பட்ட குழுக்கள் அல்லது தனிநபர்கள் ஆகியோரினால் தனிநபர்கள் பெயர் நியமனம் செய்யப்படுதல் வேண்டும்.

2. அரசியலமைப்பு அல்லது பொருத்தமான சட்டம் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு ஆணைக்குழு தொடர்பான தேவைப்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு தெரிவு இடம்பெற்றது.

3. நேர்மை, சுதந்திரம், பக்கச்சார்பற்றநிலை ஆகியன மிக முக்கிய நெறிமுறைகளாக காணப்பட்டன.

4. ஆணைக்குழுவின் பணியுடன் சம்பந்தப்பட்டதொழில்சார் அனுபவம் இரண்டாவது முக்கிய நெறிமுறையாகும். பல சிறந்த ஆளுமைகள் விண்ணப்பித்த பொழுதிலும் அவர்களுள் பலர் குறிப்பிட்ட ஆணைக்குழுவின் பணிகளுக்கு அவசியமான தகைமைகளையோ அல்லது அனுபவத்தையோ கொண்டிருக்கவில்லை.

5. முக்கியமான நிறுவனங்களில் அல்லது பதவிகளில் சிறப்பான பண்புகளையும் தலைமைத்துவத்தையும் வெளிப்படுத்திய தமது துறைகளில் சராசரியைவிட மேம்பட்ட நபர்களைக் கண்டறிவதே மூன்றாவது நெறிமுறையாகும்.

6. அனுபவத்தைப்போல் முதிர்ச்சியும் ஒரு அவசியமான காரணியாகும். இருப்பினும் ஆணைக்குழுவின் பணிகளுக்கு புதிய கருத்துகளை கொண்டுவரக்கூடிய இளம் விண்ணப்பதாரிகளும் உள்ளடக்கப்பட்டனர்.

7. பரிசீலிக்கப்பட்ட மற்றுமொரு காரணி பல்வகைமையாகும். குறிப்பாக இனம், பால்நிலை ஆகியவற்றின் அடிப்படையில் பல்வகைமை கருத்திற் கொள்ளப்பட்டது. அதன்மூலம் உறுப்பாண்மையில் பொருத்தமான சமநிலை பேணப்பட்டது.

8. சில விடயங்களைப் பொறுத்தவரையில் "நன்கு மதிக்கப்பட்டவர்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டது - சிவில் சமூகத்தெரிவிற்குள்ளான மூன்று விண்ணப்பதாரிகளும் மாறுபட்ட தேர்தல் தொகுதிகளையும், துறைகளையும் சேர்ந்தவர்கள். தெரிவு செய்யப்பட்ட அனைத்து தனிநபர்களும் பொதுவாக

பொதுமக்கள், தமது தேர்தல் தொகுதி ஆகியவற்றின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களென உப குழுவினால் உணரப்பட்டவர்கள்.

9. கடந்த காலங்களில் ஆணைக்குழுபற்றி பொதுமக்களிடம் பாரிய அளவிலான விமர்சனங்கள் காணப்பட்டன. அண்மைய வருடங்களில் குறிப்பிட்ட எந்த ஆணைக்குழுவிலும் இருக்காத பெயர் குறிப்பிடப்பட்டவர்களை உள்ளடக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

10. திறன்சார்ந்த மதிப்பீடொன்று செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் பல்வேறுவகையான கல்வித் தகைமைகள், பல்வேறுவகையான தொழில்வாண்மை அமைப்புகளில் பங்குபற்றியவர்கள் ஆகியோரே ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றிருந்தமை கண்டறியப்பட்டது. ஆணைக்குழுவினால் தெரிவிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட துறைகளில் விரிவான அனுபவங்களை உடையவர்கள், இளம் விண்ணப்பதாரிகள் ஆகியோர் ஆகக்கூடிய புள்ளிகளை பெறவில்லை. இவ்விடயத்தை எவ்வாறு முன்னெடுப்பது என்பதை சபை தீர்மானித்தது.

11. சகல தீர்மானங்களும் கருத்தொற்றுமையின் அடிப்படையில் ஏகமனதாக மேற்கொள்ளப்பட்டது.

6. ஆணைக்குழுக்களில் போதியளவு பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும்படி டாக்டர் (திருமதி) ராதிகா குமாரசாமியும் பிரேரித்திருந்தார்.

7. ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் படிகளை ஆராய்ந்த சபை, மேற்குறிப்பிடப்பட்ட படிகளை மீளாய்வு செய்வதன் அவசியத்தை வலியுறுத்தியது. நிதியமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடியதன் பின்னர் மேற்குறிப்பிட்ட படிகளுக்கு மீளாய்வுகளை விதந்துரைப்பதற்கு தீர்மானித்தது. நிதி அமைச்சின் செயலாளருடன் பின்னர் மேற்கொண்ட கலந்துரையாடல்களைத் தொடர்ந்து ஆணைக்குழுவின் முழுநேர தவிசாளருக்கு ரூ. 150,000/- படியையும் உத்தியோகபூர்வ வாகனமொன்றை வழங்குவதற்கும்

அத்தோடு ஆணைக்குழுவின் தவிசாளருக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனத்திற்கு ஏற்ப 225 லீற்றர் பெற்றோல் அல்லது டீசலுக்கான தொகையை தற்போதைய சந்தை விலைக்கு ஏற்ப மாதாந்தம் படியாக வழங்குவதற்கும் ஆணைக்குழுவின் தவிசாளரைத் தவிர்ந்த ஏனைய உறுப்பினரொருவருக்கு ரூ. 100,000/- படியாக வழங்குவதற்கும், தவிசாளரைத் தவிர்ந்த ஏனைய உறுப்பினரொருவருக்கு போக்குவரத்துப் படியாக ரூ. 25,000/-ஐ வழங்குவதற்கும் ஆணைக்குழுக்களின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகயோருக்கு தொலைபேசி, இணைய படியாக ரூ. 5,000/-ஐ வழங்குவதற்கும் சபை தீர்மானித்தது.

8. 2015 நவம்பர் 9 இல் நடைபெற்ற கூட்டத்தில் மற்றும் சனாதிபதி சட்டத்தரணி கௌரவ சிப்லி அசீஸ் அவர்களினால் தெரிவிக்கப்பட்ட ஆலோசனையின் ஆகியவற்றின் பிரகாரம் அரசியலமைப்பின் 41(இ) உறுப்புரையின் அட்டவணையிலுள்ள அதிகாரிகளுக்காக சனாதிபதியினால் விதந்துரைக்கப்பட்ட நியமனங்களுக்கு அங்கீகாரம் அளிக்கையில் அரசியலமைப்பின் 17ஆவது திருத்தத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அரசியலமைப்புச் சபையினால் பின்பற்றப்பட்ட அதே நெறிமுறைகளை பின்பற்றுவதற்கு சபை தீர்மானித்தது. சபையின் தீர்மானத்தை மேதகு சனாதிபதி அவர்களுக்கு அனுப்பிவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் சபையின் தீர்மானம் சனாதிபதியின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது.

**நெறிமுறைகள் பின்வருமாறு:**

***(அ) பிரதம நீதியரசர்***

I. உயர் நீதிமன்ற நீதிபதியொருவர் (பொதுவாக மிகவும் மூப்புரிமை கொண்ட)
II. சட்டத்துறை தலைமை அதிபதி
III. உத்தியோகபூர்வமற்ற சட்டத்தரணிகள் சங்கத்தின்;
    (அ) ஆகக்குறைந்தது 30 வருட அங்கத்துவத்தையுடைய சட்டத்தரணி

(ஆ) வெற்றிகரமாக தனது தொழிலை மேற்கொள்கின்ற சட்டத்தரணி.

(இ) நீதிபதிகளிடமும், சட்ட தொழில்துறையிலும் நன்மதிப்பை உடையவர்.

மேற்படி (ii) அல்லது (iii) ஆம் வகையை சேர்ந்தவர்கள் 62 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் கூடாது.

***(ஆ) உயர்நீதிமன்ற நீதிபதிகளைப் பொறுத்தவரையில்;***

சட்டத்தரணிகள் சங்கத்தில் சட்டத்தரணியாக ஆகக்குறைந்தது 25 வருட அங்கத்துவத்தையுடைய சிறப்பான திறமையுடைய நபரொருவர் மற்றும்;

I. மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதியொருவர் (பொதுவாக மூப்புரிமையின் அடிப்படையில்)

II. வெற்றிகரமாக தனது தொழிலை மேற்கொள்கின்ற அதேவேளை நீதிபதிகளிடமும், சட்டதொழில்துறையிலும் உயர்வான நன்மதிப்பை உடைய உத்தியோகபூர்வமற்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்டத்தரணி.

III. ஆகக்குறைந்தது மன்றாடி அதிபதியாக பதவி வகித்த உத்தியோகபூர்வ சட்டத்தரணிகள் சங்க உறுப்பினரொருவர்.

IV. (அ) நீதி அமைச்சின் செயலாளர்

(ஆ) சட்ட வரைஞர்.

(இ) (அ) (ஆ) மற்றும் (இ) விடயத்தில் அவர் ஒரு சட்டவல்லுனர் அல்லது சட்டத்துறையில் உயர்கல்வியை ஈட்டிக்கொண்டவராக

(i) சட்டத்துறையின் விருத்திக்கு மற்றும் முன்னேற்றத்திற்கு ஒரு கணிசமான பங்களிப்பைச் செய்திருப்பவர்

(ii) நீதிபதிகளாலும் சட்ட தொழில்வாண்மையாளராலும் உயர்வாக கருதப்படுபவர்

(ii), (iii) மற்றும் (iv) வகுதிகளில் உள்ள ஒருவர் 62 வயதுக்கு மேற்பட்டவராக இருக்கக்கூடாது

***(இ) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர்***

(i) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஒரு நீதிபதி (சாதாரணமாக மிகவும் சிரேஷ்ட நீதிபதி)

(ii) (அ) ஒரு சட்டத்தரணியாக ஆகக் குறைந்தபட்சம் 25 வருடங்கள் சேவை அனுபவத்தை கொண்டிருப்பவர்

(ஆ) ஒரு வெற்றிகரமான தொழில்வாண்மைத் துறையைக் கொண்டிருப்பவர்

(இ) உத்தியோகபூர்வமற்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் ஒரு தொழிற்செயற்படுத்துனராக நீதிபதிகளாலும் சட்டத் தொழில்வாண்மையாளராலும் உயர்வான மதிப்பைக் கொண்டிருக்கும் ஒருவர்

(iii) (அ) ஒரு சட்டத்தரணியாக ஆகக் குறைந்தபட்சம் 25 வருடங்கள் சேவை அனுபவத்தைக் கொண்டிருப்பவர்

(ஆ) ஆகக் குறைந்தது மன்றாடி அதிபதி பதவிநிலையை நிரந்தரமாகக் கொண்டிருப்பவர்

(இ) உத்தியோகபூர்வ சட்டத்தரணிகள் சங்கத்தின் ஒரு தொழிற்செயற்படுத்துனராக நீதிபதிகளாலும் சட்டத் தொழில்வாண்மையாளராலும் உயர்வான மதிப்பைக் கொண்டிருக்கும் ஒருவர்

வகுதிகள் (ii) மற்றும் (iii) இல் உள்ளடங்கும் ஆட்கள் 60 வயதினை விஞ்சியிருக்கக்கூடாது

**(ஈ) மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள்**

ஒரு சட்டத்தரணியாக குறைந்தபட்சம் 20 வருட அனுபவமுடைய தலைசிறந்த இயலுமையுடைய ஒருவர்

1. ஒரு உயர்நீதிமன்ற நீதிபதி (சாதாரணமாக மூப்பு ஒழுங்கில்)
2. உத்தியோகபூர்வமற்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் ஒரு தொழிற்செயற்படுத்துனராக நீதிபதிகளாலும் சட்டத் தொழில்வாண்மையாளராலும் உயர்வான மதிப்பைக் கொண்டிருக்கும்

ஒருவரும் ஒரு வெற்றிகரமான தொழில்வாண்மை துறையினைக் கொண்டிருப்பவரும்

3. ஆகக்குறைந்தது மன்றாடி அதிபதி பதவிநிலையினை நிரந்தரமாகக் கொண்டிருப்பவரும் உத்தியோகபூர்வ சட்டத்தரணிகள் சங்கத்தின் ஒரு உறுப்பினரும்

4. (அ) நீதியமைச்சின் செயலாளர்

   (ஆ) நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர்

   (இ) சட்டவரைஞர்

   (ஈ) சட்டத்துறையில் உயர்ந்த கல்வியை ஈட்டிக்கொண்ட ஒரு சட்ட அறிஞர்.

   (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) களின் விடயத்தில் அவ்வண்ணமான ஒரு ஆளானவர்

   (i) சட்டத்தின் விருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் ஒரு கணிசமான பங்களிப்பை செய்திருப்பவர் மற்றும்

   (ii) நீதிபதிகள் மற்றும் சட்ட தொழில்வாண்மாளரால் உயர்ந்த மதிப்பை கொண்டிருப்பவர்

வகுதிகள் (ii) (iii) மற்றும் (iv) இல் வரும் ஆட்கள் 60 வயதினை விஞ்சியிருக்கக்கூடாது

**(உ) நீதிச்சேவை குழுவின் உறுப்பினர்கள்**

உயர்நீதிமன்றத்தின் இரண்டு மிக சிரேஷ்ட நீதிபதிகள் நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கு அங்கீகரிக்கப்படுகிறார்கள். எவ்வாறாயினும் தவிசாளர் மற்றும் மிக சிரேஷ்ட நீதிபதியாகிய இருவரும் துறைசார் நீதித்துறை உத்தியோகத்தர்களாக இல்லாத சந்தர்ப்பத்தில் அதிசிரேஷ்ட துறை நீதிபதியின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு சாத்தியம் இருக்கும்பொழுது நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு அங்கீகரிக்கப்படுவார்.

**(ஊ). சட்டத்துறை தலைமையதிபதி**

(i) உயர்நீதிமன்றத்தின் ஒரு நீதிபதி

(ii) மன்றாடியார் தலைமையதிபதி

(iii) மேலதிக மன்றாடி அதிபதி நிரந்தரப் பதவிநிலையைக் கொண்டிருந்த ஒரு ஆள் (சாதாரணமாக மூப்பு ஒழுங்கில்)

(iv) (அ) உத்தியோகபூர்வமற்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் ஒரு தொழிற் செயற்படுத்துனர் உயர்ந்தபட்சம் 30 வருட அனுபவத்துடன் கூடியவர்

(ஆ) வெற்றிகரமான துறை வளர்ச்சியைக் கொண்டிருப்பவர்

(இ) நீதிபதிகள் மற்றும் சட்ட தொழில்வாண்மையில் உயர்மதிப்பைக் கொண்டிருப்பவர்

**(எ). கணக்காய்வாளர் தலைமையதிபதி**

(i) பிரதிக் கணக்காய்வாளர் நாயகமானவர்,

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து ஒரு பட்டத்தைக் கொண்டிருப்பவர் (விரும்பத்தக்க வகையில் பொருளியல், சட்டம் அல்லது கணிதம்)

(ஆ) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் ஒரு உறுப்பினர் (ACA)

(இ) பொதுத்துறையில் ஒரு நிறைவேற்றுத்தர பதவிநிலையில் தகைமைக்கு பிந்திய 5 வருட அனுபவத்தைக் கொண்டிருப்பவர்

(ii) கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்தில் குறைந்தபட்சம் 25 வருட சேவையுடைய ஒரு பிரதி கணக்காய்வாளர் நாயகம்

(iii) (அ) ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு பட்டத்தைக் கொண்டிருக்கும் ஒருவர் (விரும்பத்தக்க வகையில் பொருளியல், சட்டம் அல்லது கணிதம்)

(ஆ) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் ஒரு உறுப்பினர் (ACA)

(இ) கணக்கியல், கணக்காய்வு, நிதிக்கட்டுப்பாடு அல்லது கண்காணிப்பில் ஒரு நிறைவேற்றுத்தர பதவிநிலையில் தகைமைக்கு பிந்திய 15 வருட அனுபவத்தைக் கொண்டிருப்பவர் (பொதுத்துறையில் ஆகக்குறைந்தது 10 வருட இவ்வாறான அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும்)

**(ஏ). பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி.**

ஒரு சிரேஷ்ட பிரதி பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி சாதாரணமாக அதீத மூப்புடைய பின்வருபவற்றைக் கொண்டிருப்பவர்

(i) பொலிஸ்படையில் ஒரு தொடர்ச்சியான சேவை

(ii) நடவடிக்கை பிரதேச கடமைகளில் ஒரு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவிநிலையில் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்து இருத்தல். (ஒரு பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான ஒரு உத்தியோகத்தராக ஒருவருடத்திற்கு குறையாத சேவை செய்த குறைந்தபட்சம் 2 சேவைக்காலப் பகுதிகளை இது உள்ளடக்க வேண்டும்)

(iii) ஒன்று அல்லது பல விசேட கடமைப் பிரிவுகளில் ஒரு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவிநிலையில் 5 வருட சேவையொன்றைக் கொண்டிருப்பவர் (குற்றவியல் விசாரணைப் பிரிவு, களப்படை தலைமைச் செயலகங்கள், வழங்கல் மற்றும் சேவைகள் நிர்வாக தலைமைச் செயலகம்)

(iv) ஒரு பிரதி பொலிஸ்மா அதிபராக அல்லது சிரேஷ்ட பொலிஸ்மா அதிபராக 5 வருடங்கள் தொடர்ச்சியான சேவையுடன் பணிக்குப் பொறுப்பான ஒரு பிரதி பொலிசுப் பரிசோதர் தலைமையதிபதியாக ஒரு வருடத்திற்கு குறையாத காலப்பகுதிக்கான ஒரு சேவை உள்ளடங்கலாக

புலனாய்வுத்துறையில் ஒரு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவிநிலையில் ஒரு சேவையைப் பூர்த்தி செய்திருப்பது ஒரு மேலதிக தகைமையாக இருக்கும்.

**(ஒ) நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்)**

(i) உயர்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஒரு ஓய்வுபெற்ற நீதிபதி

(ii) பின்வருவனவற்றைக் கொண்ட ஒரு ஆள்

(அ) சட்டத்தரணியாக 20 வருடசேவை

(ஆ) சட்டத்தில் அறிவும் அனுபவமும் மற்றும் பின்வரும் சட்டங்கள் தொடர்புடைய செயற்படுத்துகை

(1) அடிப்படை உரிமைகள்

(2) இயற்கை நீதி மீதான நிர்வாகச் சட்டம்

(iii) பின்வருவனவற்றைக் கொண்ட ஒரு ஆள்

(அ) பொதுவாழ்வில் ஒரு மதிப்பிற்குரிய பதவிநிலையைக் கொண்டிருத்தல்

(ஆ) அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுக்கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி அமைப்புக்கள் மற்றும் மொத்த நிறுவனங்களின் தொடர்புடைய மனித உரிமை மீறுகை செயற்பாடுகள் மற்றும் ஏனைய அநீதிகள் தொடர்புடைய ஒரு அறிவும் அனுபவமும்

**(ஓ) பாராளுமன்ற செயலாளர் நாயகம்**

(i) பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகம்

(ii) அவர்,

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்லைக்கழகம் ஒன்றிலிருந்தான ஒரு பட்டத்துடன் (விரும்பக்கூடிய முறையில் சட்டம்) மற்றும்

(ஆ) சட்டத்தரணியாக 25 வருட அனுபவத்துடன்

(இ) பின்வருவனவற்றில் நல் அறிவைக் கொண்டிருத்தல்

1. பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள்
2. சுதந்திரம் கிடைத்ததிலிருந்து இலங்கை அரசியலமைப்பு
3. பாராளுமன்ற செயலகம் மற்றும் அதனது கிளைகளின் கூட்டமைவு

(ஈ) பின்வருவனவற்றில் வேலை அறிவுடன்

1. சுதந்திரத்திலிருந்து தேர்தல் சட்டங்கள்
2. பொதுநலவாயம் மற்றும் ஏனைய சட்டவாக்க அமைப்புக்களின் செயன்முறைகள்

3. அரசாங்க திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு பிரயோகிக்கப்படக்கூடிய பொதுநிர்வாகம் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் திறைசேரி சுற்றுநிருபங்கள்

(உ) குறிப்பாக பின்வருவனவற்றுக்கான இயலுமையுடன்

1. தனியார் சட்டமூலங்களுடன் தொடர்புடைய சட்டங்கள் உள்ளிட்ட சட்டவாக்க வரைவு மற்றும் குழுநிலையான விவாதங்களுக்கு உதவுதல்.

2. அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு, அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, தெரிவுக்குழுக்கள் உள்ளடங்கலாக விசேட குழுக்களுக்கு செயலாளராக தொழிற்படல்.

9. குறிப்பிடப்பட்ட அலுவலகங்களுக்காக சனாதிபதியினால் பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் விதந்துரைக்கப்படும்பொழுது அரசியலமைப்பின் 41(இ)(1) ஆம் உறுப்புரையின் கீழ் குறிப்பிடப்பட்ட அலுவலகங்களுக்காக விதந்துரைப்பதற்காக பரிசீலிக்கப்பட்ட சகல பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் தொடர்பான வாழ்க்கை வரலாறு பற்றிய விபரங்களை அனுப்பிவைக்கும்படி சனாதிபதியின் செயலாளருக்கு தெரிவிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது. அத்தோடு சபையின் தகவல்களுக்காக அதனை சபைக்கு ஆற்றுப்படுத்தவேண்டும். அரசியலமைப்பு சபையின் பதில் செயலாளர் நாயகத்தினால் சபையின் தீர்மானம் சனாதிபதியின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது.

**மீளாய்விற்கு உட்பட்ட காலப்பகுதியினுள் சபையின் விதப்புரைகள் மற்றும் அங்கீகாரங்கள்.**

(அ) ஆணைக்குழுக்கள்

பின்வரும் நியமனங்களை சபை விதப்புரை செய்தது.

(i) இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழு.

திரு. டய்டஸ் போதிபால வீரசூரிய (தவிசாளர்)

திரு.டபிள்யூ. லால் ரன்சித் சில்வா

திரு. சந்திரநாத் நெவில் குருகே

(ii) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

(டாக்டர்) (Ms) நெலும் தீபிகா உடகம (தவிசாளர்)

திரு. சாலிய சித்சிரி மார்க் பீரிஸ்

திரு.ஹமீட கஸ்சாலி ஹுசைன்

Ms. அம்பிகா சற்குணநாதன்

திரு.உபநந்த விதானபதிரன

(iii) தேசிய பொலிஸ் ஆணைக்குழு.

போராசிரியர் எஸ்.டி. ஹெட்டிகே (தவிசாளர்)

திரு.பி.எச். மனதுங்க

Ms. சாவித்திரி தர்ஷினி விஜேசேகர

திரு. அன்டன் பெனடிக் ஜயநாதன்

திரு. வை.எல்.எம்.சவாஹிர்

திரு. டொன் திலக் பத்மநாபா கொல்லுரே

திரு. ரெவர் பெஷிவல் பிரேங் டி சில்வா

(iv) பகிரங்க சேவை ஆணைக்குழு

திரு தர்மசேன திஸாநாயக (தவிசாளர்)

திரு அப்துல் ஸலாம் அப்துல் வாஹித்

Ms. தரனி விஜயதிலக

திரு பிரதாப் ராமானுஜம்

விஜயலக்ஷ்மி ஜெகராசசிங்கம்

திரு சன்டி நிஹால் செனவிரத்ன

திரு சுகததாச ரனுகே

திரு டீ.எல். மென்டிஸ்

திரு எஸ்.ஏ.சீ. சரத் விஜயவர்தன ஜயதிலக

(v) தேர்தல் ஆணைக்குழு

திரு வடுகே வருனசிறி மஹிந்த தேசப்பிரிய (தவிசாளர்)

திரு நலின் ஜயந்த அபேசேகர

திரு சமுவெல் ரத்னஜீவன் ஹூலெ

(vi) எல்லை நிர்ணய ஆணைக்குழு

திரு தவலிங்கம் கனகரத்னம் (தவிசாளர்)

(கலாநிதி) அனிலா டயஸ் பண்டாரநாயக்க

(பேராசிரியர்) சாஹுல் ஹமீத் ஹஸ்புல்லா

(vii) நிதி ஆணைக்குழு

திரு உதித ஹரிலால் பலிஹக்கார (தவிசாளர்)

திரு வேலுபிள்ளை கனகசபாபதி

(கலாநிதி) ஹரீத் மொஹமட் ஸப்ருல்லா

திரு அர்ஜுன மஹேந்திரன் – மத்திய வங்கியின் ஆளுநர் – பதவிவழி உறுப்பினர்

(கலாநிதி) ஆர்.எச்.எஸ். சமரதுங்க, திறைசேரிச் செயலாளர், பதவிவழி உறுப்பினர்

(viii) கணக்காய்வு சேவை ஆணைக்குழு

திரு எச்.எம். காமினி விஜேசிங்க – கணக்காய்வாளர் தலைமை அதிபதி – பதவிவழி தவிசாளர்

திரு நிஹால் சுனில் ராஜபக்ஷ

திரு இலங்ககோன்கே காமினி அபேரத்ன

திரு வேலுபிள்ளை கந்தசாமி

திரு வேவல அப்புஹாமிலாகே சோமபால பெரேரா

(ix) தேசிய பெறுகை ஆணைக்குழு

திரு பூசா பதுகே நிஹால் இந்துனத் பிரனாந்து அபேசுந்தர
விக்கிரமசூரிய (தவிசாளர்)
திரு அன்தனி நிஹால் பொன்சேகா
தோன என்பீதா ரங்கனி சித்ரலதா வெடிக்கார
திரு புலுக்குட்டி ஆரச்சிகே தொன் கிறிஸ்டி ரேமன்ட் பெரேரா
திரு மேயன் வாமதேவன்

ஆ) மேல் முறையீட்டு நீதிமன்றத்துக்கான நீதிபதியொருவரின் நியமனம்

அரசியலமைப்பின் 107(1) மற்றும் 41(இ)(1) ஆகிய உறுப்புரைகளுக்கிணங்க மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக உயர் நீதிமன்ற நீதிபதி சிரியானி த லிவேரா தென்னகோனை நியமிப்பதற்கான சனாதிபதி அவர்களின் விதப்புரையை பேரவை அங்கீகரித்தது.

இ) உச்ச நீதிமன்றத்துக்கான நீதிபதியொருவரின் நியமனம்

அரசியலமைப்பின் 107(1) மற்றும் 41(இ)(1) ஆகிய உறுப்புரைகளுக்கிணங்க உச்ச நீதிமன்ற நீதிபதியாக மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி திரு கே.ரீ. சித்ரசிறியை நியமிப்பதற்கான சனாதிபதி அவர்களின் விதப்புரையை பேரவை அங்கீகரித்தது.

ஈ) கணக்காய்வாளர் தலைமை அதிபதி

அரசியலமைப்பின் 153(1) மற்றும் 41(இ)(1) ஆகிய உறுப்புரைகளுக்கிணங்க திரு எச்.எம். காமினி விஜேசிங்கவை கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக நியமிப்பதற்கான சனாதிபதி அவர்களின் விதப்புரையை பேரவை அங்கீகரித்தது.

## அரசியலமைப்பின் உறுப்புரை 41(எ)(1)இன் கீழ் ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கை

2015 டிசம்பர் முதல் 2016 பெப்ரவரி வரையான அரசியலமைப்புச் சபையின் இரண்டாவது அறிக்கை.

**அரசியலமைப்புச் சபையின் கூட்டங்கள்.**

2015 டிசம்பர் 04. 2015 டிசம்பர் 22, 2016 ஜனவரி 06, 2016 ஜனவரி 09, 2016 பெப்ரவரி 08, 2016 பெப்ரவரி 10, 2016 பெப்ரவரி 19, 2016 பெப்ரவரி 26 ஆகிய தினங்களில் சபையின் கூட்டங்கள் நடைபெற்றன.

**மீளாய்வின் கீழுள்ள காலப்பகுதியின்போது அரசியலமைப்பின் உறுப்புரை 41(இ)(1) இன் கீழ் மேதகு ஜனாதிபதியின் பரிந்துரைக்கான அங்கீகாரத்தினை வழங்குதல்.**

1. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஒருவரின் நியமனம்.

   உயர்நீதிமன்ற நீதிபதியான திரு.பி.பி.சூரசேனவினை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக மேதகு ஜனாதிபதி நியமித்தமையினை 2016 ஜனவரி 06 இல் கூடிய சபை அங்கீகரித்தது.

2. சட்டத்துறைத் தலைமையதிபதியின் பதில் நியமனத்தினை அங்கீகரித்தல்.

   மன்றாடியார் தலைமயதிபதியான திரு சுகத கல்யாண கமலத் ஜனாதிபதி சட்டத்தரணியின் சட்டத்துறைத் தலைமையதிபதி பதவியின் பதில் நியமனக் காலப்பகுதியினை அரசியலமைப்பின் உறுப்புரை 41(இ)(2)இன் பிரகாரம் நீடிப்பதற்கான ஜனாதிபதியின் பரிந்துரையினைச்சபை 2016 ஜனவரி 25 இல் ஏகமனதாக அங்கீகரித்தது.

3. சட்டத்துறைத் தலைமை அதிபதியின் நியமனம்.

திரு.ஜயந்த சந்திரசிறி ஜயசூரிய, ஜனாதிபதி சட்டத்தரணி, சிரேஷ்ட மேலதிக மன்றாடியார் தலைமையதிபதியினை சட்டத்துறைத் தலைமையதிபதி பதவிக்கு மேதகு ஜனாதிபதி நியமித்தமையினை 2016 பெப்ரவரி 10 இல் சபை அங்கீகரிக்கத் தீர்மானித்தது.

4. உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் நியமனம்.

கௌரவ நீதிபதி எச்.என்.ஜே.பெரெரா மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியினை உயர் நீதிமன்ற நீதிபதியாக மேதகு ஜனாதிபதி நியமித்தமையினை 2016 பெப்ரவரி 26 இல் சபை அங்கீகரிக்கத் தீர்மானித்தது.

**சபையினால் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள்.**

1. ஆணைக்குழுக்களின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் அரசியலமைப்புச் சபையுடன் கிரமமான கூட்டங்களை நடத்தி ஆணைக்குழுக்களின் செயற்பாட்டினை மதிப்பிடுவதற்காக அரசியலமைப்புச்சபை மூலமாக காலாண்டிற்கொரு தடவை அல்லது சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டவாறு அவ்வாறு குறித்துரைக்கப்பட்டிருப்பின் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிட வேண்டுமெனச் சபை தீர்மானித்தது. இதற்கமைய கணக்காய்வுச்சேவை ஆணைக்குழுவினதும் தேர்தல் ஆணைக்குழுவினதும் தவிசாளர்களும் உறுப்பினர்களும் அவர்களின் ஆணைக்குழுக்கள் தொடர்பான விடயங்களைக் கலந்துரையாடுவதற்காக 2015 டிசம்பர் 04 ஆம் திகதி சபையுடன் சந்திப்பினை மேற்கொண்டனர். எல்லை நிர்ணய ஆணைக்குழு, தேசிய பெறுகை ஆணைக்குழு, கணக்காய்வுச்சேவை ஆணைக்குழு மற்றும் தேர்தல் ஆணைக்குழு ஆகியவற்றின் தவிசாளர்களுடன் திறைசேரியிலிருந்தான நிதி ஒதுக்கீடு, பணியாளர் தேவைப்பாடு மற்றும் அலுவலக இடத்திற்கான தேவைப்பாடு போன்ற விடயங்களைப்பற்றிச் சபை 2015 ஜனவரி 09 ஆம் திகதி கலந்துரையாடியது.

2. பெறுகை ஆணைக்குழுவின் தவிசாளரின் வேண்டுகோளின்படி பாராளுமன்றக்குழு அறைகளில் ஆணைக்குழுவின் கூட்டத்தினை நடத்த அரசியலமைப்புச் சபைத் தவிசாளர் அனுமதி வழங்கினார்.

3. தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதி பதவி மாற்றம், தேர்தல் ஆணையாளர் தலைமையதிபதியினது ஓய்வுபெறும் வயதினைக் குறைத்தல், ஆணைக்குழுக்களின் தவிசாளர்களின் மற்றும் உறுப்பினர்களின் உத்தேச ஊதியங்கள் மற்றும் கொடுப்பனவுகள் ஆகியவற்றினை அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெறுவதற்காக அனுப்பிவைப்பதற்காக அமைச்சரவைப் பத்திரத்தினை கௌரவ பிரதம அமைச்சரின் செயலாளருக்கு அனுப்பச் சபை தீர்மானித்தது. தேர்தல் ஆணைக்குழுவிற்கான அரசியலமைப்புத் திருத்தங்கள் தொடர்பான முன்மொழிவினை அமைச்சரவை 2015.12.16 இல் அங்கீகரித்ததாக அமைச்சரவையின் செயலாளர் 2015.12.24 ஆம் திகதியிடப்பட்ட அவரின் கடிதம் மூலம் அறிவித்தார்.

4. அரசியலமைப்பின் உறுப்புரை 41(இ)க்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியமனங்கள் தொடர்பாக ஒரு புதிய தெரிவடிப்படைத் தொகுதியினை உருவாக்குவதற்கான தேவையினைச் சபை கலந்துரையாடியது. மேற்குறிப்பிடப்பட்ட விதிகளை உருவாக்குவதில் கட்சித் தலைவர்களின் கருத்துக்கள் பெறப்படல் வேண்டுமென்ற கருத்தினை சபை கொண்டிருந்தது. இதற்கமைய அரசியலமைப்பின் பதினேழாவது திருத்தத்தின்கீழ் அமைக்கப்பட்ட அரசியலமைப்புச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தெரிவடிப்படைகளின் பிரதிகள் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் கருத்துக்களைப் பெறுவதற்காக அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

5. உயர்நீதிமன்ற நீதிபதிகளாகவும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளாகவும் ஜனாதிபதி சட்டத்தரணிகளாகவும் நியமிக்கப்படவுள்ள நபர்களைப் பரிந்துரைக்கையில் மேதகு ஜனாதிபதி கலந்தாலோசிக்கக்கூடிய பிரதம நீதியரசர், உயர்நீதிமன்றத்தின் சிரேஷ்ட நீதிபதிகள், சட்டத்துறைத்

தலைமையதிபதி, உத்தியோகப்பற்றற்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக்குழுவினை உருவாக்கும் முன்மொழிவிற்கு சபை இணங்கியது.

6. ஆணையாளர்களுக்கு ஏற்கனவே கிடைக்கின்ற சில வசதிகள் மற்றும் சிறப்புரிமைகளுக்கு அமைவாக அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான அமைச்சரவைத் தீர்மானத்தினைத் திருத்துவதற்காக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுக்களை விசாரிக்குமாறு ஆணைக்குழு விடுத்த வேண்டுகோளைப் பரிசீலிக்கச்சபை தீர்மானித்தது.

## அரசியலமைப்பின் உறுப்புரை 41(எ)(1)இன்கீழ் ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கை.

2016 மார்ச் முதல் 2016 மே வரையான அரசியலமைப்புச் சபையின் மூன்றாவது அறிக்கை.

**அரசியலமைப்புச் சபையின் கூட்டங்கள்.**

2016 மார்ச் 16, 2016 ஏப்ரல் 18, 2016 ஏப்ரல் 28, 2016 மே 31 மற்றும் 2016 ஜுன் 10 ஆகிய தினங்களில் சபையின் கூட்டங்கள் நடைபெற்றன.

**மீளாய்வின் கீழுள்ள காலப்பகுதியின்போது அரசியலமைப்பின் உறுப்புரை 41(இ)(1)இன் கீழ் மேதகு ஜனாதிபதியின் பரிந்துரைக்கான அங்கீகாரத்தினை வழங்கல்.**

1. மேன்முறையீட்டு தீதிமன்ற நீதிபதி ஒருவரின் நியமனம்.

   திரு.எல்.யு.ஜயசூரிய, உயர்நீதிமன்ற நீதிபதியினை அரசியலமைப்பின் உறுப்புரை 107(1) மற்றும் 41(இ) (1) இன் பிரகாரம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக மேதகு ஜனாதிபதி நியமித்தமையினை 2016 மார்ச் 16 இல் கூடிய சபை அங்கீகரித்தது.

2. பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் நியமனம்.

   பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவிக்கான மேதகு ஜனாதிபதியின் மூன்று நியமனங்களைப் பரிசீலித்த சபை அதன் 2016 ஏப்ரல் 18 ஆம் திகதிய கூட்டத்தில் அரசியலமைப்பின் உறுப்புரை 61உ(1)(ஆ) மற்றும் உறுப்புரை 41இ(1)இன் பிரகாரம் சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியான திரு.பீ.எஸ்.பி.ஜயசுந்தரவினை பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவிக்காக அங்கீகரித்தது.

3. நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கு உறுப்பினர் ஒருவரின் நியமனம்.

உயர்நீதிமன்ற நீதிபதியான கௌரவ சிசிர ஜெ.த ஆப்ரு அவர்களை அரசியலமைப்பின் உறுப்புரை 111ஈ மற்றும் 41இ(1)இன் பிரகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக மேதகு ஜனாதிபதி நியமித்தமையினை 2016 ஏப்ரல் 28இல் கூடிய சபை ஏகமனதாக அங்கீகரித்தது.

4. உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் நியமனம்.

ஜனாதிபதி சட்டத்தரணியான திரு பிரசன்ன சுஜீவ ஜயவர்தனவினை அரசியலமைப்பின் உறுப்புரை 107(1) மற்றும் 41 இ(1) இன் பிரகாரம் உயர்நீதிமன்ற நீதிபதியாக மேதகு ஜனாதிபதி நியமித்தமையினை 2016 ஜுன் 10 இல் கூடிய சபை ஏகமனதாக அங்கீகரித்தது.

**உறுப்புரை 41 எ (2) இன் பிரகாரம் பேரவையால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய கடமைகள்**

1. 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நலன்புரி அனுகூலங்கள் சபைக்கு உறுப்பினர்களை நியமிக்கும் போது கௌரவ நிதி அமைச்சரால் குறிப்பிடப்பட்ட மூலப் பிரமாணங்களை நடைமுறைப்படுத்த பேரவை அங்கீகரித்தது.

**பேரவையால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய தீர்மானங்கள்**

1. சுயாதீன ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள் தற்போது அனுபவித்து வரும் மேலதிக சலுகைகளும் வசதிகளும் சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான வேதனாதிகள் மற்றும் படிகள் கொடுப்பனவு தொடர்பான அமைச்சரவை தீர்மானங்களின் காரணமாக பாதிப்படையக் கூடாது என்று பேரவை தீர்மானித்தது.

2. ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் வெளிநாடு செல்ல விடுமுறை பெற்றுக்கொள்ளும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறை தொடர்பாக தேர்தல் ஆணையாளரின் வினவுதலின் மேல், பேரவையின் சார்பாக ஆணைக்குழுக்களின் தலைவர்களின் மற்றும் உறுப்பினர்களின் வெளிநாடு செல்வதற்கான விடுமுறை வேண்டுகோள்களுக்கு அனுமதியளிப்பதற்கான அதிகாரத்தை அரசியலமைப்புப் பேரவையின் தலைவருக்கு வழங்க குழு

தீர்மானித்தது. குறித்த தீர்மானம் ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்களின் செயலாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

3. பிரதம நீதியரசர், மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், உச்ச நீதிமன்றத்தினதும் மேல் முறையீட்டு நீதிமன்றத்தினதும் ஏனைய நீதிபதிகள் மற்றும் சட்டத்துறை தலைமை அதிபதி ஆகியவர்களின் நியமனத்தின் போது கவனிக்கப்பட வேண்டிய மூலப்பிரமாணங்கள் மற்றும் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை பற்றி சனாதிபதி சட்டத்தரணி திரு சிப்லி அஸீஸ் தயாரித்த குறிப்பு பற்றி அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு குழு தெரியப்படுத்தியது.

4. பேரவையால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பாக மக்களை விழிப்பூட்டுவதற்காக ஓர் ஊடக அறிவித்தலை குழு வெளியிட்டது.

# <u>அரசியலமைப்பின் 41 எ(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்படவுள்ள அறிக்கை</u>

2016 ஜூலை முதல் 2016 செப்டெம்பர் வரைக்குமான அரசியலமைப்புப் பேரவையின் நான்காவது அறிக்கை

**அரசியலமைப்புப் பேரவையின் கூட்டங்கள்**

2016 ஜூலை 07, 2016 ஆகஸ்ட் 12, 2016 ஆகஸ்ட் 25 மற்றும் 2016 செப்டெம்பர் 08 ஆகிய திகதிகளில் குழு கூடியது.

**மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் அதிமேதகு சனாதிபதி அவர்களின் விதப்புரைகளுக்கும் சனாதிபதிக்கு அனுப்பிய பேரவையின் விதப்புரைகளுக்கும் அங்கீகாரமளித்தல்**

1. மேல் முறையீட்டு நீதிமன்றத்துக்கான நீதிபதியொருவரின் நியமனம்

   மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் திரு எஸ். துரைராஜா அவர்களை மேல் முறையீட்டு நீதிபதியொருவராக நியமிப்பதற்கான சனாதிபதியின் பெயர் குறிப்பிடுதலை 2016 செப்டெம்பர் 08 ஆந் திகதி கூடிய பேரவை அரசியலமைப்பின் 107 (1) மற்றும் 41இ (1) ஆகிய உறுப்புரைகளின் பிரகாரம் ஏகமனதாக அங்கீகரித்தது

2. தேசிய பெறுகை ஆணைக்குழுவில் வெற்றிடமான பதவிக்கான நியமனம்

   குறும்பட்டியிலிடப்பட்ட விண்ணபதாரர்களை பரிசீலித்ததன் பின்னர், தேசிய பெறுகை ஆணைக்குழுவில் வெற்றிடமான பதவிக்கான நியமனத்துக்காக வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ நிறுவனம் மற்றும் இலங்கை கைத்தொழிற்துறை மன்றம் ஆகியவற்றிலிருந்து புதிதாக விண்ணப்பங்கள் பரிசீலனைக்காக கோரப்படும் என்று குழு தீர்மானித்தது.

   அரசியலமைப்பின் 41ஆ(3) ஆம் உறுப்புரையின் பிரகாரம் திரு தொன் நொயெல் லக்ஷ்மன் விக்கிரமசிங்க அவர்களை தேசிய பெறுகை ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிப்பதற்கான பெயர் குறிப்பிடுதலை குழு ஏகமனதாக விதப்புரை செய்தது.

**உறுப்புரை 41எ (2)இன் பிரகாரம் பேரவை மேற்கொள்ளும் ஏனைய கடமைகள்**

1. திரு அன்தனி பொன்சேகா அவர்களை இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் உறுப்பினரொருவராக நியமிப்பதற்கான சனாதிபதியின் பெயர்குறிப்பிடுதலை 2016 ஜூலை 7 ஆந் திகதி கூடிய பேரவை 2002 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க நாணயச் சட்டத்தினால் (திருத்தம்) திருத்தப்பட்ட நாணயச் சட்டத்தின் 323 ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏகமனதாக அங்கீகரித்தது.

2. 2016 ஜூலை 7 ஆந் திகதி கூடிய பேரவை 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் 4 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2 ஆம் பிரிவின் பிரகாரம் நலன்புரி அனுகூலங்கள் சபையின் உறுப்பினர்களாக கௌரவ நிதி அமைச்சரின் பின்வரும் பெயர்குறிப்பிடுதல்களை நியமனம் செய்வதற்கு ஏகமனதாக அங்கீகரித்தது.

   I. சபையின் தவிசாளராக திரு சுகததாச ரனுக்கே
   II. சபை உறுப்பினராக திரு காமினி சரத் எதிரிசிங்க
   III. சபை உறுப்பினராக திரு ஏ.ஆர். தேசப்பிரிய
   IV. சபை உறுப்பிராக திரு சுனில் சாந்த ஹெட்டியாரச்சி
   V. சபை உறுப்பினராக திரு திஸ்ஸ நாணாயக்கார

3. தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவுக்கான நியமனம்

   நிறுவனங்களிலிருந்தும் உயர் தொழில் குழுக்களிலிருந்தும் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியனமனம் பெறுவதற்கு பெயர்களைக் கோரி பத்திரிகை விளம்பரமொன்று வெளியிடப்பட்டதுடன் அதற்கான 40 விண்ணப்பங்களும் கிடைக்கப்பெற்றன.

   பேரவையில் உள்ள சிவில் சமூக உறுப்பினர்களால் ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட 15 விண்ணப்பங்கள் பேரவையால் குறும்பட்டியலிடப்பட்டது.

   2016 ஆகஸ்ட் 25 ஆந் திகதி கூடிய பேரவை கீழ்வரும் ஆட்களை 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமை சட்டத்தின் பிரகாரம் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவுக்கு ஏகமனதாக நியமித்தது.

1. நீதிபதி ஸலீம் மர்ஸூப் – (சட்டத்துறையின் பிரதிநிதியாக)
2. கிசாலி பின்டோ ஜயவர்தன – (வெளியீட்டாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியவர்களின் பிரதிநிதியாக)
3. திரு நாகநாதன் செல்வகுமாரன் – (சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதியாக)
4. திரு தொன் மஹிந்த கம்மம்பில } பேரவையால் பெயர்குறிப்பிடப்பட்ட
5. திரு எஸ்.ஜீ. புஞ்சிஹேவா } அடுத்த இரண்டு ஆட்களாக

**பேரவையால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய தீர்மானங்கள்**

- அரசியலமைப்புப் பேரவைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுவொன்று தொடர்பில் கௌரவ சட்டத்துறை தலைமை அதிபதியின் அபிப்பிராயத்தை பேரவை நாடியதுடன் அரசியலமைப்பின் பொறுப்பாணைக்கமைவாக பேரவை அதன் கடமைகளில் ஈடுபடுவதற்கு முன்னதாக பேரவை ஒரு புதிய தொகுதி விதிகளை வகுக்க வேண்டுமென்ற கட்டாயத் தேவை இல்லையென்று தெரிவிக்கப்பட்டதுடன் உறுப்புரைகள் 41ஆ அல்லது 41இ ஆகியவற்றின் கீழ் ஏதேனும் நியமனத்துக்காக ஆட்களை நியமிக்கும் போது மற்றும்/அல்லது விதந்துரைக்கும்போது பேரவை, ஒரு தொகுதி விதிகளுக்கு இணங்கியொழுகுவதை விடவும் குறித்த ஒரு தொகுதி வழிகாட்டு நெறிகளுக்கு அமைந்தொழுக வேண்டுமென்று அது தீர்மானித்தது.
- அரசியலமைப்பின் 41இ உறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் பதவியில் செயற்படுவதற்கான ஆட்களின் நியமனத்தை அங்கீகரிப்பதற்கான அதிகாரத்தை குழு சார்பாக கௌரவ சபாநாயகருக்கு வழங்குவதற்கும், அதற்குப் பிற்பாடு தழுவல் அங்கீகாரத்துக்கான அதிகாரத்தை அரசியலமைப்புப் பேரவைக்கு வழங்குவதற்கும் குழு தீர்மானித்தது .